செ.வெ. எண். 301

நாள் 01.04.10

செய்தி வெளியீடு – 1.4.2010

## நாளை சென்னைப் பல்கலைக் கழகத்தின் பவளவிழாக் கலையரங்கில் செம்மொழித் தமிழாய்வு மத்திய நிறுவனத்தின் சார்பில் "தமிழ் மருத்துவத்தின் தொன்மையும் தனித்தன்மையும்" குறித்த கருத்தரங்கம்!

# துணை முதலமைச்சர் திரு. மு.க. ஸ்டாலின் தொடங்கி வைக்கிறார்!

செம்மொழித் தமிழாய்வு மத்திய நிறுவனத்தின் சார்பில், நாளை (2.4.2010 – வெள்ளிக்கிழமை) காலை 10 மணிக்கு, சென்னைப் பல்கலைக் கழகத்தின் மெரினா வளாகத்தில் உள்ள பவளவிழாக் கலையரங்கில், "தமிழ் மருத்துவத்தின் தொன்மையும் தனித்தன்மையும்" குறித்த கருத்தரங்கம் நடைபெறுகிறது.

மாண்புமிகு தமிழக துணை முதலமைச்சர் திரு. மு.க.ஸ்டாலின் இந்தக் கருத்தரங்கத்தினைத் தொடங்கி வைக்கிறார்.

தஞ்சைத் தமிழ்ப் பல்கலைக்கழகத்தின் துணைவேந்தர் முனைவர் ம.இராசேந்திரன் தலைமையில் நடைபெறும் இக்கருத்தரங்கின் நோக்கம் குறித்து, மத்திய ஆயுர்வேத, சித்த மருத்துவ ஆராய்ச்சிக் குழுமத்தின், சித்த மருத்துவ அறிவுரைக் குழுத் தலைவர் பேராசிரியர் புது. செயப்பிரகாசு நாராயணன் விளக்கவுரை ஆற்றுகிறார். டாக்டர் எம்.ஜி.ஆர் மருத்துவப் பல்கலைக் கழகத்தின் துணைவேந்தர் பேராசிரியர் மயில்வாகனன் நடராசன், நெல்லை மனோன்மணியம் சுந்தரனார் பல்கலைக் கழகத்தின் துணைவேந்தர் பேராசிரியர் இரா.தி. சபாபதிமோகன், சென்னை இராமச்சந்திரா மருத்துவப் பல்கலைக் கழகத்தினுடைய இதய அறுவை சிகிச்சை மையத்தின் தலைவர் மற்றும் இயக்குநர் டாக்டர் ச. தணிகாசலம் ஆகியோர் வாழ்த்துரை வழங்குகிறார்கள். செம்மொழித் தமிழாய்வு மத்திய நிறுவனத்தின் பொறுப்பு இயக்குநர் பேராசிரியர் ச. மோகன் வரவேற்புரை வழங்கிட, பொறுப்பு அலுவலர் பேராசிரியர் க. இராமசாமி நன்றியுரை ஆற்றுவார்.

வெளியீடு, இயக்குநர்,
செய்தி, மக்கள் தொடர்புத் துறை,
தலைமைச் செயலகம், சென்னை-9.